1995 ஏப்ரல் 18]

328—

காளான் விதைகள் விற்பனை செய்தல்.

24243—*திரு. ஆர். பி. பரமசிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில். காளான் விதைகள் அனைத்து வேளாண்மை அலுவலங்களிலும் விற்பனை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, இந்தத் காளான் என்பது இப்போது இறைச்சி போன்று, அதாவது சைவத்தில் இறைச்சி என்று போற்றப்படுகிற ஒரு வகையாக இருக்கிறது. தற்போது படித்த இளைஞர்கள் இந்தக் காளான் வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு, அதுவும் விஞ்ஞான ரீதியில் இந்தக் காளான் வளர்ப்பதைத் தொழிலாகக் கொண்டு, இதனை வளர்த்து இன்று நவநாகரீக நட்சத்திர ஓட்டல்களுக்குக் கூட வினியோகம் செய்கிறார்கள். அதோடு மேலும் அதனைப் பதனப்படுத்தி வெளிநாட்டுக்குக்கூட ஏற்றுமதி செய்கின்ற வாய்ப்பு இருக்கிறது. இதனால் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய அந்த நல்ல சூழ்நிலைகூட இதனால் இருக்கிறது. ஆனால் இந்தக் காளான் விதைகளைத் தேடிப்பிடிக்கிற அளவுக்கு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் ஆங்காங்கே இருக்கின்ற வேளாண்மை அலுவலகங்களின் மூலமாக இந்தக் காளான் விதைகளை வினியோகம் செய்து படித்த இளைஞர்கள் அதைப் பயன்படுத்தி பொருளாதாரத்தில் மேலும் வளர்ச்சி அடைய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது இந்தக் காளான், இந்தக் காளான் என்று சொன்னார்கள். இங்கே வினா கேட்கப்பட்ட்து உணவுக் காளான் பற்றி. சில உதவாத காளான்கள் கூட நாட்டிலே இருக்கின்றன. ஆனால் உணவுக் காளான்களைப் பொறுத்த மட்டில் தேவையான விதைகள் இன்றைக்கு வேளாண் பல்கலைக் கழகத்திலே இருக்கின்றன. தனியார்களும் உற்பத்தி செய்து தருகிறார்கள். எனவே தட்டுப்பாடு என்பது இல்லை. இருப்பினும் இந்தத் தொழில் செய்ய முன்வருகிற உழவர் பெருமக்களுக்கு, படித்தவர்களுக்குத் தேவையான பயிற்சியினை வேளாண் பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது. அதைப்போல வேளாண்மை ஆராய்ச்சி மையங்களும் வழங்கி வருகின்றன.

முற்பகல் 10.20

திரு ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு வகைக் காளான் விதைகளை தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அலுவலகம் வாயிலாக வினியோகம் செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் தட்டுப்பாடு இன்றுவரை வரவில்லை. தேவையான அளவுக்கு விதைகள் இருக்கின்றன. எனவே அதிகமான விதைகள் தேவைப்படக்கூடிய காளான்கள் வருகிற போது அரசு இதுபற்றி பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான் என்பது ருசியான சுவை தரக்கூடிய உணவு வகையைச் சேர்ந்தது. இந்தக் காளான்களை விரிவுபடுத்துவதற்காக நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கோவை விவசாயப் பல்கலைக் கழகத்திற்கு வந்தபோது பல திட்டங்களை அங்கு சேகரித்து அதை விரிவுபடுத்தவேண்டுமென்று அறிவுரை கூறினார்கள். அந்த வகையிலே இந்தக் காளான் உற்பத்தி தமிழகம் முழுவதும் பெருகுவதற்கு கோவை விவசாயப் பல்கலைக்கழகத்தில் இதற்கென்று தனியாக ஒரு துறையை ஆரம்பித்து இது நவீனமுறையில் விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுக் காளான் உற்பத்திக்கு இன்றைக்கு உலக நாடுகளிலே மிகப் பெரிய கிராக்கி இருக்கின்றது. தமிழகத்தில் இருந்துகூட மிகப்பெரிய அளவிலே காளான்கள் உற்பத்தி செய்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறார்கள். இது ஒரு குடிசைத் தொழிலைப் போல. விவசாயத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் பருவமழைக் காலத்திலே மட்டும் வரக்கூடிய பயிர்களை நம்பியிராமல், இதர காலங்களிலே அவர்களுக்கு வருமானம் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதுபோன்ற பயிற்சிகளை தந்து கொண்டிருக்கிறோம். இந்தப் பயிற்சியை நிறைவேற்றுவதற்கு ரூ.69 இலட்சம் செலவில் திட்டங்கள் தீட்டி இன்றைக்கு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு வே. தம்புசாமி.

திரு வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான் விதைகள் கிடைப்பதிலே தட்டுப்பாடு இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். எங்கேயும் கிடைப்பதில்லை. ஆடுதுறையிலும்கூட உற்பத்தி என்பது இப்பொழுது இல்லை. ஆகவே ஒரு தாலுகா தலைநகர அளவிலாவது இந்தக் காளான் உற்பத்தி செய்து ஒன்றிய வேளாண்மைத்துறை அலுவலகத்தின் மூலம் விற்பனை செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். இன்றைக்குப்போதிய அளவுக்கு வேளாண் காளான்கள் வேளாண் பல்கலைக்கழகத்திலே 'தரப்படுகிறது. தனியார்கூட இன்றைக்கு விதைகளை உற்பத்தி செய்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள். தேவையான அளவுக்கு விதைகள் கிடைக்கின்றன. துறையே தயார்செய்து விற்க வேண்டிய அவசியம் இன்றுவரை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, காளான்களில் இரண்டு வகை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒன்று சாப்பிடும் காளான், மற்றொன்று நச்சுத்தன்மை உடையது என்று. அப்படி இருக்குமாயின், நச்சுத்தன்மை உடையது எது? சாப்பிடும் காளான் எது என்று கண்டுபிடிப்பது எப்படி என்று அறிய விரும்புகிறேன்.

[*1995 ஏப்ரல் 18*

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் விரும்பிச் சாப்பிடுவது உணவுக் காளான் மக்களால் ஒதுக்கப்பட்டு கூட்டி அல்லது தூக்கி எறியப்படுவது உதவாத காளான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காளான்களுக்கு வெளிநாடுகளிலே அதிகமான கிராக்கி இருப்பதால் இதனை ஏற்றுமதி செய்வதற்கு நல்ல வாய்ப்பு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய பகுதியிலே வேளாண்மைத்துறையிலே சாக்கோட்டை, ஆடுதுறை போன்ற பல்வேறு இடங்களில் மிகச் சிறந்த முறையில் விவசாயம் பெருகுகின்ற அளவிலே தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியிலே வாழ்ந்து அங்கேயே இந்தக் காளான்களை வளர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமானால் அங்கு இந்தக் காளான்களை வளர்ப்பதற்கு மானியத் தொகையும், அதைப் போல மானியத்திலே விதைகளும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதனை ஏற்றுமதி செய்வதற்கும் இந்த அரசாங்கத்தின் சார்பாக உதவிகள் செய்து கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சாக்கோட்டை என்னும் இடத்தில் அங்கு இருக்கக்கூடிய உழவர் மக்களுக்கு குறிப்பாக தாய்மார்களுக்கு காளான்கள் வளர்ப்பதற்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வந்தது. அந்த பயிற்சி 5 நாட்கள் அளிக்கப்பட்டது. அதிலே ஒவ்வொருக்கும் ஏறத்தாழ 300 ரூபாய்க்கு இடுபொருட்கள் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்தக் காளான்களை வளர்த்து உணவுக் காளான்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய யார் முன் வந்தாலும் மிகப் பெரிய தொழிற்சாலையாக ஏறக்குறைய கோடிக்கணக்கில் முதலீடு செய்து தொழில் துவங்க யார் முன் வந்தாலும் அவர்களுக்கு தேசிய தோட்டக்கலை நிறுவனத்திடமிருந்து வட்டியில்லாக் கடனாக பணம் பெற்றுச் செல்வதற்கு இந்த அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அதுபோல தனியார் தொழில் துவங்க அரசை அணுகினால் தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகத்தின் மூலமாக இணைந்து கூட்டுறவுத் துறையிலே தொழில் துவங்குவதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 18]

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான்களில் வட்டக்காளான், சிப்பிக்காளான் என்று இருவகை இருப்பதாக அறிகிறேன். சிப்பிக்காளான் வகையைத்தான் சமவெளிப் பகுதியிலே நாம் உற்பத்தி செய்ய முடியும். சிப்பிக்காளான் விதையை தென்னை நார் போன்றவற்றில் மக்க வைத்து நல்ல தொழு உரமாக மாற்றுவதற்கு பயன்படுகிறது என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட காளான் விதைகளை பெரிய அளவிலே வேளாண் துறை மூலமாக உற்பத்தி செய்து, நல்லதொழு உரத்தை உருவாக்குவதற்கும், அதிகமான உணவு காளான்களை உற்பத்தி செய்வதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்றும், நாளை நடைபெறவிருக்கும் வேளாண் துறை மானியக் கோரிக்கையின்போது இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் காளான் வகையிலே செய்யப்பட்ட பிரியாணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து நாம் எல்லாம் சுவைக்க ஒரு வாய்ப்பை அளிப்பார்களா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைவிட நன்றாகக்கூட தரலாம்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்பிக்காளான், அதாவது தரைப் பகுதிகளிலே வளரக்கூடியது. வட்டக்காளான், தொழிற்சாலைகள் மறறும் மலைப் பகுதிகளிலே வளரக்கூடியது. அதுபோல் சாம்பல் நிறத்திலே இருக்கக்கூடியது ஆஸ் காளான் ஆகும். இவைகளை உலர்த்தி மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தென்னை நார்களிலே இருந்து காளான் வளர்ப்பது பற்றிய மூலப் பொருள் என்பது அவ்வளவு சாத்தியமானது அல்ல. ஆனால், குறிப்பாக காவிரிப் பாசனப் பகுதிகளிலே, தஞ்சை, நாகை-காயிதே மில்லத் போன்ற பகுதிகளிலே குறுவை அறுவடை செய்கின்றபோது வைக்கோல்கள் மழையிலே நனைந்து வீணாகிக் கொண்டிருக்கின்றன. அந்த வைக்கோலிலிருந்து சிப்பிக்காளான் வளர்ப்பது ஏதுவாகும், அதுவே சிறப்பானதாகும் என்று இன்றைக்கு வல்லுநர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால் அனைவருக்கும் காளான் சூப் தருவதற்கு நான் ஆவன செய்கிறேன்.

[*1995 ஏப்ரல் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்தால் வேண்டாம் என்றா சொல்லப்போகிறோம். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான்கள் எல்லாம் மழை, மின்னல் போன்ற நேரங்களிலே இயற்றையாக முளைக்கும். சிறு பிள்ளைகளாக இருக்கும்போது விளையாட்டாக நாங்கள் எடுத்துக்கொண்டுபோய் குழம்பு வைத்து சாப்பிடுவோம். அது கோழிக்கறி போல் இருக்கும். என்ன வைட்டமின்கள் அந்த காளான்களில் இருக்கின்றன என்பதை வேளாண்துறை மூலம் ஆராய்ச்சி செய்தீர்களா? பச்சைக் காளான் சாப்பிட்டால் காது செவிடாகிவிடும். அது குறித்து அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? அதிலே நன்மை எது, தீமை எது என்று நீங்கள் ஏதாவது ஆராய்ச்சி செய்து பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்தி இருக்கிறீர்களா? அந்தக் காளான்கள் மார்க்கெட்டிலே கிடைப்பதில்லை. **ஆனால் பொதுமக்களுக்கு கிடைப்பதில்லை. அதைப் போக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்பது சரியல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைக்காளான் சாப்பிட்டால் காது செவிடாகிப்போகிறது என்பதற்கு இங்கே யாரும் பச்சைப் பிள்ளைகள் அல்ல. ஏனென்றால் ஒரு காலத்திலே காளான் சில நேரங்களில் உணவுக்கு பயன்பட்ட காலம் உண்டு. ஆனால் இப்போது உணவுக்கு பயன்படக்கூடிய காளான் எது என்பதை இன்றைக்கு கண்டுபிடித்திருக்கிறார்கள். அதேபோல் நச்சுத்தன்மை கொண்ட காளான் எது என்பதையும் இன்றைக்கு அடையாளம் கண்டிருக்கிறார்கள். எனவே உணவுக்கு பயன்படக்கூடிய காளான்களை மட்டும்தான் உற்பத்தி செய்து உணவுக்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு காளானிலே 65%க்கு மேல் புரதச்சத்து இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இறைச்சியை உண்டால் அதிலே கொழுப்புச் சத்து அதிகமாக இருக்கிறது. இறைச்சியில் கிடைக்கக்கூடிய புரதச்சத்தைவிட காளானில் கிடைக்கக்கூடிய புரதச்சத்து அதிகம். அதேநேரத்தில் கொழுப்பு என்பது முழுமையாக நீக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் இவ்வளவு பெரிய மார்க்கெட் காளானுக்கு இன்றைக்கு உலக அளவில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை உணவுக் காளான் பற்றித்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். காளான்களிலேயே பென்சிலின், ஆஸ்பர்ஜிலஸ் மற்றும் பல மருத்துவ குணங்கள் உள்ள காளான்கள் இருக்கின்றன. அவற்றை, ஊட்டி, கொடைக்கானல் போன்ற குளிர்ந்த பிரதேசங்களிலே வளர்க்கலாம். அவ்வாறு அவற்றை வளர்த்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஊட்டியிலே மிகப்பெரிய தொழிற்சாலை ஒன்று காளான்களை வளர்த்து மேலை நாடுகளுககு ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது. அதுபோல் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏறத்தாழ 15 கோடி ரூபாய்க்கு மேலே மூலதனம்போட்டு தனியார் ஒருவர் காளான் உற்பத்தி செய்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார். இன்றைக்கு ஒரு புதிய நிறுவனமாக தனியாரும், தமிழ்நாடு வேளாண் தொழில் கழகமும் இணைந்து கூட்டுத் துறையிலே மிக விரைவிலே ஒரு காளான் வளர்ப்பு தொழிற்சாலையை உருவாக்க இருக்கிறோம் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 329, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

முற்பகல் 10.30

329—

ஆரணியில் பால் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை.

36229—**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணி நகரில் பாலிதீன் பைகளில் ஆவின் பால் விற்பனையை அதிகரிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?